**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 159/2022**

Prosecution witness : 2

| | |
|---|---|
| Name: ஆறுமுகம் | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

A1 and A2 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 24.09.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கீழக்ரை உட்கோட்ட திருப்புல்லாணி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 10.06.2019 மதுரை தெப்பக்குளம் காவல்நிலையத்தில் நான் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்று 21.00 மணிக்கு ரகசிய தகவலாளி நேரில் ஆஜராகி எனக்கு கொடுத்த தகவலினை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து ஆய்வாளரிடம் அனுமதி பெற்று நிலையதலைமைக்காவலர்-ஜெய்கணேஷ் மற்றும் முதல்நிலை காவலர்-சரவணகுமார் ஆகியோர் சகிதம் அனுப்பானடி பேருந்து நிறுத்தம் ◌ மேற்கு பக்கம் செல்லும்போது அங்கு இருசக்கரவாகனம் (TN 67A 4255)யமகா பைக்கில் வந்த இருவரை விசாரணை செய்தபோது முன்னுக்குபின் முரணாக தகவல் சொல்லிபின்னர் விசாரித்ததில் அவர்கள் செல்லூார், சுயராஜ்ஜியபுரத்தை சேர்ந்த தினேஷ்குமார் மற்றும் அனுப்பானடி நடுத்தெருவை சேர்ந்த பாலமுருகன் என்பது தெரியவந்தது. அவர்களிடம்

தாங்கள் போதைப்பொருள் வைத்திருப்பதாக எங்களுக்கு ரகசிய தகவல் உள்ளது. அதன் அடிப்படையில் உங்களையும் உங்கள் வாகனத்தையும் சோதனையிடவேண்டும். அதற்கு அரசிதழ்சான்றிதழ் பெற்ற அதிகாரியிடம் அழைத்து செல்லக்கோர உங்களுக்கு உரிமை உள்ளது என்று தெரிவித்தோம். அவர்கள் அவ்வாறு தேவையில்லை தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன் அடிப்படையில் 21.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அவர்களிடம் கையொப்பம் பெற்று சாட்சியாக நானும் கையொப்பம் செய்தேன். அதன் அடிப்படையில் அவர்களை சோதனை செய்து பின்னர் வாகனத்தை சோதனை செய்தோம். மேற்படி வாகனத்தில் பிளாஸ்டிக் கவரில் சுற்றிய நிலையில் கஞ்சா இருந்தது. அதுகுறித்து விசாரணை செய்தபோது அவர்கள் அடையாளம் தெரியாத நபர்களிடம் வாங்கி சுயலாபத்திற்காக விற்பனைக்காக வைத்திருப்பது தெரியவந்தது. பின்னர் 1வது எதிரி - தினேஷ்குமார் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனி நபர் சாட்சிகள் யாரும் சாட்சிகளாக இருக்க முன் வராத காரணத்தால் போலீஸ்சாட்சிகள் முன்னிலையில் 22.00 மணிக்கு பதிவு செய்தேன். அதன் அடிப்படையில் அவர்கள் வைத்திருந்த கஞ்சாவை எடைபோட்டதில் 1.200கிராம் இருந்தது. அதில் தலா 50கிராம் இரண்டு பொட்டலங்கள் கட்டி அதற்கு S1,S2என குறியிட்டேன். மீதம் உள்ள 1.100கிலோகிராம் கஞ்சாவை பொட்டலம் கட்டி P1 என குறியிட்டேன். மேற்படி S1, S2குறியிட்ட கஞ்சா பொட்டலங்களையும், P1 என குறியிட்ட கஞ்சா பொட்டலத்தையும் அவர்கள் பயன்படுத்திய கஞ்சா வைத்திருந்த இருசக்கரவாகனம் (TN 67 A 4255) யையும் அத்தாட்சியில் 22.30 மணிக்கு கைப்பற்றினேன். பின்னர் 22.45 மணிக்கு எதிரிகள் இருவரையும் காரணம் கூறி கைது செய்து 23.00 மணிக்கு

நிலையம் வந்து எதிரிகள் மீது நிலைய குற்ற எண்.326/2019, ச/பி.8(c)r/w 20(b)(ii)(B)NDPSACTன் படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து, பிரிவு 57ன் படியான தனி அறிக்கையையும் ஆய்வாளர் பார்வைக்கு தக்க மேல் நடவடிக்கைக்காக வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். என்னால் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.3** ஆகும். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பிரிவு 57ன் படியான விரிவான அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும். S1 என குறியீடு செய்யப்பட்டு பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சா **சா.பொ.1** ஆகும். S2 என குறியீடு செய்யப்பட்ட நிலையான மாதிரி **சா.பொ.2** ஆகும். P1 என குறியீடு செய்யப்பட்ட மீதம் உள்ள கஞ்சா **சா.பொ.3** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.